# வலிகள் கோமான் கௌதுல் அஃழம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி
## (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்)

வல்லோனைப் போற்றிப் புகழ்ந்து வள்ளல் நபிகளாரின் மீதும், அவர்களது குடும்பத்தினர், நற்றவத்தோழர்கள், நல்லடியார்கள், வலிமார்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறித் தொடங்குகிறேன்.

குதுபுல் அக்தாப், கௌதுல் அஃழம், அல்குதுப்புர் ரப்பானி, வல் கௌதுஸ் ஸமதானி, மஹ்பூபுஸ் ஸுப்ஹானி, கின்தீலே நூரானி, மஃசூகே ரஹ்மானி போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்கள் பன்னெடும் காலமாக முஸ்லிம் சமூகத்திலே முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களை அழைக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் அடைமொழிகளாகும். முஹம்மத், அஹ்மத் போன்ற நபிகளாரின் பெயர்களை அடுத்து ஒரு காலத்தில் சமூகத்தில் புரையோடிப்போன பெயராக முஹியித்தீன் எனும் பெயரே காணப்பட்டது என்றால் அது மிகையாகாது. இலங்கை இந்தியா மாத்திரமல்ல உலகின் நாலாப்புறங்களிலும் அதிகமான பள்ளிவாசல்களுக்கும், தக்கியாக்களுக்கும், ஸாவியாக்களுக்கும் முஹியித்தீன் எனும் பெயர் சூட்டப்பட்டிருப்பதைக் காணும் போது முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்கள் தீனுல் இஸ்லாத்துக்கு ஆற்றிய பங்களிப்பும் அவர்கள் உருவாக்கிய வலிமார்கள் பெரியார்களது உண்ணத உழைப்புமே மனக்கண்ணெதிரே தோண்றுகின்றது.

மாபெரும் தவசீலராய் திகழ்ந்த ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களது வாழ்வின் எல்லா கட்டங்களையும் வல்ல இறைவன் பல்வேறு அற்புதங்கள், அஸ்ராருகள், கராமத்துக்களை வழங்கி மேண்மைப்பபடுத்தியுள்ளான். வலிமார்ாகளின் தலைவாரான குதுபு நாயகம் அவர்களது ஜனனமும், பரம்பரையும், வாழ்வும், பணியும், கஷ்பு கராமத்துகள் அற்புதங்கள் நிறைந்நத ஒரு சமுத்திரத்திமாகும். இச்சிறு ஆக்கம் அந்த சமுத்திரத்தில் ஒரு துளியையேனும் நிறப்பிவிடாது.

### குதுபு அவர்களின் பரிசுத்தப் பரம்பரை

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் தந்தை வழித் தலைமுறை மூலமும் தாய் வழிப்பரம்பரை மூலமும் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் அஹ்லு பைத்தைச் சென்றடைகிறார்கள். இவர்களது தகப்பனாரும் பதினொருாம் நுற்றாண்டிலே மிகவும் பிரபல்யமான வலிமாகளில் ஒருவருமான ஷெய்கு அபூ ஸாலிஹ் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களது தந்தைவழித்தொடர் பதினொராவது தலைமுறையில் நபிகளாரின் பேரரான இமாம் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சென்றடைகிறது. அதே வேளை ஷெய்க் அவர்களது தாய்வழித்தொடர் அவர்களது தாயாரான உம்முல் கைர் பாத்திமா பின்தி ‘அப்துல்லாஹிஸ் ஸௌமயீ’ ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வாயிலாக நபிகளாரின் மற்றுமோர் பேரரான இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சென்றடைகிறது.

மாத்திரமன்றி இமாம் அஸ்ஸௌமயீ அவர்களும் அக்காலத்தில் எல்லோராலும் அறியப்பட்ட அற்புதங்கள் நிறைந்த இறைநேசராகக் காணப்பட்டார்கள் எனபதும் குறிப்பிடத்தக்கது. ஆக தந்தை வழியிலும் தாய் வழியிலும் நபிப் பரம்பரையாக இருக்கும் குதுபு நாயகம் அவர்கள் அக்காலத்தில் விலாயத்தின் உயர்நிலையில் இருந்த வலித்துவப் (விலாயத்துப்) பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதும் வெள்ளிடைமலையாகும்.

இது தவிர கௌஸுல் அஃழம் அவர்களின் பாட்டனார்களுள் ஒருவரான ஷெய்க அப்தில்லாஹ் ஷெய்க் ஸாலிஹ் அவர்களது தாயார் ஸித்தீகுல் அக்பர் அபூபக்கர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பரம்பரையச் சேர்ந்தவர்களாகும். மாத்திரமன்றி குதுபு நாயகம் அவர்களின் தாய் வழிப்பரம்பரையில் வரக்கூடிய சில தாய்மர்களது தந்தைவழித்தொடர், செய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் செய்யிதுனா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது நஸபுடன் தொடர்புபடுதாக 'அஷ் ஷெய் அப்துல் மஜீத்' அவர்கள் 'இத்ஹாபுல் அகாபீர் பீ சீரதி வ மனாகிபி முஹியித்தீன் அப்தில் காதிர் அல் ஜீலானி அல் ஹஸனி வல் ஹுஸைனி' என்ற கிரந்தத்தில் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான விடயங்கள் ஷெய்க் அப்தில் காதிர் அல் ஜீலானி அவர்களது நஸபுவழித்தொடரை மேலும் மேன்மைப்படுத்துகின்றன.

## ஷெய்கு அவர்களின் ஜனனமும் அற்புதங்களும்.

குதுபு நாயகம் அவர்கள் பதினொராம் நுற்றாண்டில் 1077 ஆம் ஆண்டு அதாவது ஹிஜ்ரி 470 இல் மற்றொரு அறிவிப்பின் படி ஹிஜ்ரி 471 இல் ஜீலான் அல்லது கைலான் எனும் இடத்தில் பிறந்தார்கள். அவர்களது ஜனனம் ரமழான மாதத்தில் நிகழ்ந்ததாக இமாம் 'தஹபி' அவர்கள், தங்களது பிரபல்யமான 'ஸியரு அஃலாமின் நுபலா' என்ற வரலாற்றுக் கிரந்தத்திலே குறிப்பிடுகிறார்கள். பச்சிளம் குழந்தையாக இருந்த ஷெய்கு நாயகம் அவர்கள் றமழான் மாதத்தின் பகல்நேரங்களில் தாயிடம் பாலருந்தவில்லை என்பது இமாம் 'இப்னு ஹஜர் அல் அஸ்கலானி' உள்ளிட்ட அக்கால பிரபல்யமான அறிஞர் பெருமக்களால் உறுதியாகக் கூறப்பட்டதொரு கராமத்தாகும். இதனால் ஷெய்கு நாயகம் அவர்களின் பெயரும் புகழும் அவர்கள் கைக்குழந்தையாக இருக்கும்போதே தேசமெங்கும் பரவியது. ஆகையால்தான் அடுத்த வருட நமழான் பிறை தென்படாது முகிழ்கள் மூடிக்கொண்டபோது குதுபு நாயகம் அவர்களின் தாயார் மூலமாக அந்நாளில் அவர்களது குழந்தை பால் அருந்தவில்லை என்ற சேதி அறிந்து அந்நாளும் றமழானுடைய நாளாக இருக்கும் என்று மக்கள் தெளிவடைய இதுவும் ஒரு காரணியாக அமைந்ததாக இமாம் 'தாதுகி' அவர்கள் 'அல்–கலாயித்' என்ற கிரந்தத்தில் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு பச்சிளம் பாலகனாக இருக்கும்போதே விலாயத்தின் அறிகுறிகள் தென்பட்ட மகானாக கௌது நாயகம் அவர்கள் காணப்பட்டார்கள்.

அவர்களது பத்தாவது வயதில் அவர்கள் மத்ரஸாவிற்கு செல்லும் போதும் அங்கிருந்து வீடு திரும்பும்போதும் அவர்களுடன் மனிதரூபத்தில் மலக்கு ஒருவர் வருபாவராகவும், அவர், மற்ற மாணவர்களை இவர்களுக்காக வழிவிடுமாறு கோறுபவராககவும் காணப்பட்டார். அக்காலங்களிலே ஏனைய மாணவர்கள் ஒரு வாரத்திலே கற்கின்ற பாடங்களை தான் ஒரே நாளில் கற்பவராக இருந்ததாக ஷெய்கு நாயகம் அவர்கள் பின்நாளிலே குறிப்பிட்டிருக்கிறாாக்ள். அது மாத்திரமன்னறி அதே காலப்பகுதியில் அக்காலத்து அப்தாலுகளில் ஒருவர் குதுபுல் அக்தாப் அவர்களைப் பார்த்து பின்நாட்களில் இவர் மாபெரும் வலியாக வருவார் என முன்னறிவுப்புச் செய்ததாகவும் ஷெய்கு

அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (அல் கலாயித்). இவ்வாறு அவர்களது பிறப்பும் சிறுபராயமும் அல்லாஹ்வின் அருளும் பாக்கியங்களும் நிறைந்ததாகவே காணப்பட்டது.

## கல்வியும் மெய்ஞானப் பணியும்.

குதுப் நாயகம் அவர்கள் பெற்றிருந்த இல்மின் மகிமையும் அவர்கள் ஆற்றிய சமயப்பணியும் சொல்லிடங்காதவை. 'முஹியித்தீன்' (தீனை உயிர்பித்தவர்) என்ற அவர்களது புனைப்பெயருக்கேற்ப அக்காலத்தில் நலிவுற்றுப்போயிருந்த தீனுல் இஸ்லாத்துக்கு தஸவ்வுப் எனும் மெய்யான தௌஹீத் மூலம் புத்துயிர் அளித்தார்கள். இங்கு அந்நாருக்கு முஹியித்தீன் எனும் புனைப்பெயர் உருவான வரலாற்றைப் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும்.

ஒரு முறை ஷெய்கு அப்துல் காதிர் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களிடம் தாங்கள் 'முஹியித்தீன்' (தீனை உயிர்ப்பித்தவர்) என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது என வினவப்பட்டது. அப்போது ஷெய்கு அவர்கள் கூறினார்கள். ஹிஜ்ரி 516 ஆம் ஆண்டு பக்தாதில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்காக பள்ளிவாயலை நோக்கி காலில் செருப்பின்றி சென்றுகொண்டிருந்தேன். அப்போது அந்த வீதியில் சரீரம் அறமெலிந்து உடல் பேதலித்து கடும் நோயாளியாய் விழுந்து கிடக்கும் ஒரு ஜடலத்துக்கருகே வந்தேன். அப்போது அந்த நோயாளி 'ஓ அப்தல் காதிரே' என மெதுவாக எனை அழைத்து ஸலாம் கூற நானும் பதில் கூறினேன். பின்னர் அவர் நலிந்த குரலில் என்னைத் தூக்கி இருப்பாட்டிவிடும் என்றார். நான் அவ்வாறே செய்தேன். உடனே நலிவடைந்த அவரது உடல் குணமடைந்து பலவீனமான அவரது குரல் தெளிவாகியது. அப்போது அவர் என்னை நீர் அறிவீரா? எனக்கேட்க நான் இல்லையென்றேன். அப்போது அவர், நான்தான் தீனுல் இஸ்லாம். நீர் தற்போது பார்த்தது போன்று நான் மிகவும் பலவீனமடைந்து காணப்பட்டேன். இறைவன் உம்மைக்கொண்டு திடனாக என்னை உயிர்ப்பித்துவிட்டான். ஆகையல் நீர் 'முஹியித்தீன்' மார்க்கத்தை ஹயாத்தாக்கியவராவீர் என்றார். பின்னர் அவ்விடத்தை விட்டு நான் நகர்ந்து ஜும்ஆ பள்ளிவாயலுக்குச் சென்ற போது அங்கொருவர் எனக்கு செருப்பு ஒரு சோடியை வைத்து நாயகமே முஹியித்தீனே என்றார். பின்னர் ஜும்ஆத்தொழுகையின் பின்னர் வந்திருந்த அனைத்து ஜனங்களும் என்னை முஹியித்தீன் என அழைத்து எனது இரு கரங்களையும் முத்தமிட்டு என்னை முஸாபஹா செய்தனர். இதற்கு முன்னர் நான் முஹியித்தீன் என்று அழைக்கப்படவுமில்லை. அந்த நலிவுற்ற மனிதர் என்னோடு பேசியதை இந்த ஜனங்கள் அறிந்திருக்கவுமில்லை. ஆயினும் அன்று முதல் நான் முஹியித்தீன் என்ற பெயரில் அழைக்கப்படலானேன் என்றார்கள். (முஹியித்தீன் ஆண்டகை காரண சரித்திரம் ஹிகாயத்து –1)

ஷெய்கு நாயகம் அவர்கள் இல்மைத்தேடி பக்தாதுக்குச் சென்றதும் செல்லும் வழியில் அவர்கள் வழிப்பறிக்கொள்ளையர்களால் மறிக்கப்பட்டபோது உண்மை உரைத்து கள்வர் தலைவர் உட்பட அனைவரையும் இறைநேசர்களாக மாற்றியது யாவருமறிந்த பிரபல்யமானதொரு வரலாறாகும். 1990 காலப்பகுதி வரை இந்த வரலாறு இலங்கை பாடசாலைக் கல்வியின் இரண்டு அல்லது மூன்றாம் தர இஸ்லாம் பாட நூலில் ஒரு பாட அலகாக் காணப்பட்டது. ஆயினும் பின்னர் பாடத்திட்ட மீளாய்வின் போது தற்கால நவீன இஸ்லாமிய வாதிகளால் அது நீக்கப்பட்டுவிட்டது.

பக்தாதிற்கு இல்மைத் தேடி வந்த குதுபு அவர்கள் மார்க்க ஞானத்தில் அல் குர்ஆன், தப்ஸீர், உலாமுல் ஹதீஸ், பிக்ஹ், உஸூலுல் பிக்ஹ் உள்ளிட்ட சகல துறைகளிலும் அக்காலத்திலே தேர்ச்சிபெற்றிருந்த பெரியார்களிடத்தில் இல்மைக் கற்றார்கள். அதில் ஷெய்க் ஹம்மாத் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் பிரதானமானவர்களாகும்.

இல்மைக் கற்றுக்கொண்டிருந்த காலங்களில் ஓய்வு நேரங்களிலும் அதன் பின்னரும் காடு வனங்களைத் தேடிச் சென்று இறை தியானத்தில் தனிமையில் இருப்பவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களது தியானம் பற்றி கௌது நாயகம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: “ஈராக்கின் பாலைவனங்களிலும், வனாந்தரங்களிலும் இருபத்தைந்து ஆண்டுகள் மனித சகவாசமின்றி தனிமையில் இறைதியானத்திலிருந்தேன். அக்காலங்களில் மறைவான ஞானங்களை நாடி வரும் மனிதர்களும் ஜின்களும் என்னிடம் வருவார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வை நெருங்கக்கூடிய பாதைகளைக் கற்றுக்கொடுப்பவனாகக் காணப்பட்டேன். மேலும் இந்நாட்களில் பல தடைவ நான் ஹிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்தித்துள்ளேன்” எனக் குறிப்பிட்டார்கள் (‘இத்ஹாபுல் அகாபிர் பீ சீரதி வ மனாகிபி முஹியித்தீன் அப்தில் காதிர் அல் ஜீலானி அல் ஹஸனி வல் ஹுஸைனி). மாத்திரமன்றி ஷெய்க அவர்களின் கல்வத் காலங்களில் ஷெய்தான் பல வழிகளிலும் ஷெய்க் அவர்களை திசை திருப்ப முயன்று மூக்குடைந்துபோனான் என்பது ஆதாரப்பூர்வமான வரலாறாகும். ஆகையால்தான் ஷெய்க் அப்தல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் மாபெரும் தவசீலர் என பலராலும் போற்றப்பட்டார்கள்.

அக்காலத்தில் வாழ்ந்த சூபியாக்களும் வலிமார்களும் ஷெய்க் அப்தல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களை நேரடியாகக் காணாவிட்டாலும் அவர்கள் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். ஆகையினால்தான், அவர்கள் பக்தாதுக்கு வந்து அக்காலத்தில் காணப்பட்ட மாபெரும் அறிஞர்கள், சூபிகளின் சபைகளுக்குச் சென்ற போதெல்லாம் அவர்களின் மாணவர்கள் வியக்குமளவிற்கு அந்தப் பெரியார்கள் குதுபு அவர்களைக் கண்ணியப்படுத்தினார்கள். அவர்கள் பிரச்சாரப்பணியைத் தொடங்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை ஷெய்க அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள். ஒரு முறை அவர்களுக்கு ஓா அசரீரி கேட்டது, ஏய் அபதல்காதிரே நீர் பக்தாதுக்குச் சென்று மக்களை நேர் வழியின் பக்கம் அழையுங்கள். உங்களுக்கு வழங்கபட்டுள்ள ஞானங்களை மக்களுக்கு கூறி மக்களை நல்வழிப்படுத்துங்கள். எனக் கூறப்பட்டது. அந்நேரம் நபிகள் பெருமானார் ﷺ அவர்கள் தோன்றி யா அப்தல் காதிர் என அழைத்தார்கள் நபிகளாரின் அழைப்பைக்கேட்டு அவர்களைக் கண்ட மகிழ்ச்சியில் காற்றிலே நான் அவர்களை நோக்கி பல எட்டுக்களை வைத்து நடந்தேன். அப்போது எனது பாட்டனார் ﷺ அவர்கள், மக்களுக்கு உபதேசம் செய்து அவர்களை நேர்வழிப்படுத்துங்கள் எனக்கூற, நானோ அறபி அல்லாத அஜமியாயுள்ளேன், அறபு புலமைமிக்க பக்தாது மக்களிடம் எவ்வாறு நான் பேசுவேன் எனக்கேட்டேன. அப்போது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனது வாயைத்திறக்கச்சொல்லி ஏழு தடவைகள் எனது வாயில் உமிழ்ந்தார்கள். பின்னர் ஞானத்தின் திறவுகோல் செய்துனா அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தோன்றி ஆறு விடுத்தம் எனது வாயில் உமிழ்ந்தார்கள். அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து நீங்களும் நபிகளாரைப்போன்று ஏழு விடுத்தம் உமிழ்ந்திருக்கலாமே எனக் கேட்க நபிகள் கோமானுக்கு மரியாதை செய்யும் நிமித்தமே அவ்வாறு செய்ததாக அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பதிலளித்ததாக ஷெய்க ஜீலானி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதன் பின்னர் ஷெய்க அப்துல் கதீர் அல் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் பள்ளிவாயலிலே தங்களது முஸல்லாவில் இருந்தவாறே மக்களுக்கு நல்லுபதேசம் செய்யத் தொடாங்கினார்கள். அவர்களது ஆன்மீகக் கருத்துக்களும், மெஞ்ஞான சிந்தனைகளும் மக்களை மிகவும் கவர்ந்தன. அந்நாரின் உபதேசம் கேட்க கடல் கடந்தும் தேசங்கள் தாண்டியும் மக்கள் கூட்டம் படையெடுக்கலாயினர். பள்ளிவாயலின் உள்ளும் புறமும் மக்கள் உள்ளும் புறமும் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. இடம் நெருக்கடியானதைத் தொடர்ந்து தங்களது மாணாக்கார்களினதும் முரீதுகளினதும் உடல் பொருள் ஒத்துழைப்புகளுடன் மாபெரும் மத்ரஸாவைக்கட்டினாக்ள். அதன் பின்னர் ஷெய்க அவர்களது உபதேசத்திலே ஒவ்வவொரு நாளும் சுமார் எழுபதாயிரம் மக்கள் கலந்து பயன்பெறுபவர்களாகக் காணப்பட்டார்கள் என்பது இஸலாமிய தஃவாப் பணி வரலாற்றிலே முறியடிக்கமுடியாத ஒரு சாதனையாகும். மாத்திரமன்றி அறிவுக்கடல் இமாம் அல் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இல்மு போதித்த பக்தாதிலே பிரபல்யமான கலாபீடமான மத்ரஸதுன் நிழாமிய்யாவிலும் சிறிது காலம் ஷெய்க் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் கல்விப்பணியாற்றினார்கள். ஹிஜ்ரி 521 முதல் 561 வரை மொத்தமாக நாப்பது ஆண்டுகள் இல்மைப் போதித்து ஆயிரக்கணக்கான இறைநேசர்களையும் ஸாலிஹீன்களையும் அறிஞர்களையும் உருவாக்கிய சரித்திர நாயகராக கௌதுல் அஃழம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களே திகழ்கிறார்கள். இவ்வாறு ஏந்தல் நபி முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொண்டுவந்த சன்மார்க்கத்தை உயிர்ப்பிப்பதில் சூபிகளின் அரசர் கௌது நாயகத்தின் வகிபாகம் ஒப்பிட முடியா உச்சத்தைத் தொட்டிருக்கிறது. அவர்களின் அயராத உழைப்பின் பலனே நம்மையெல்லாம் ஈமான்தாரிகளாக ஆக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. திரும்பும் திசைகளெங்கும் முஹியித்தீன் எனும் நாமத்துடன் கம்பீரமாயக் காட்சியளிக்கும் ஒவ்வொரு பள்ளிவாயலும் இதற்கு சாட்சியாகும். நவீன வழியில் இஸ்லாம் என்ற போர்வையில் உலாவரும் தற்கால பிரச்சாரகர்களினால் இந்நாதாக்களின் தியாகங்கள் புறக்கனிக்கப்படட்டு சேவைகள் மழுங்கடிக்கப்பட்டு தற்கால இளைஞர் யுவதிகள் மனங்களில் பிழையாக சித்தரிக்கப்பட்டு வருவது இஸ்லாமிய சாயம் பூசப்பட்ட இஸ்ராயீலிய்யத் என்பதில் ஐயமில்லை.

அல்லாஹ்வையும் அவனது றஸுலையும் மறந்து களவு, கொள்ளை, மது போன்ற பாவகாரியங்களிலும் பித்னாக்களிலும் ஈடுபட்டுத்திரிந்த அன்றைய காலகட்ட மக்களை இஸ்லாதின் பால் அழைத்து தஸவ்வுப் வழியில் தீனுல் இஸ்லாத்தை உயிர்ப்பித்தவர்களாக கௌதுல் அஃழம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் காணப்படுகிறார்கள். இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி அவர்கள் அறிவிக்கிறார்கள். குதுபு நாயகம் அவர்களது ஒவ்வொரு மஜ்லிஸுகளிலும் பாவம் இழைத்த மக்கள் அந்நாரின் கரம் பற்றி இறைவனிடத்தில் தௌபாக்கோருவதும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் அந்ரின் கரம் பிடித்து இஸ்லாத்தில் இணைந்துகொள்வதும் வழக்கமான நிகழ்வுகளாகக் காணப்பட்டன. ஒரு முறை கிறிஸ்த்துவப் பாதிரியார் ஒருவர் ஷெய்க அவர்களின் சபைக்கு வந்து எனது உள்ளம் இஸ்லாத்தின்பால் கவரப்பட்ட போது, ஒரு சிறந்த மனிதரின் கரம் பற்றியே நான் இஸ்லாத்தைத் தழுவவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அப்போது எனது கனவில் தோன்றிய ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நீங்கள் பக்தாதுக்குச் சென்று ஷெய்க அப்துல் காதிர் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் கரம் பற்றி இஸ்லாத்தை

சிறப்புக்குரியவர் என்றார்கள். ஆகவேதான் நான் உங்களை நாடி வந்தேன் எனக் கூறி கௌதுல் அஃழம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் முன்னிலையில் இஸ்லாத்தில் இணைந்துகொண்டார். இவ்வாறு முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களது வாழ்வும் பணியும் எண்ணலிடங்கா அற்புதங்களும் மகத்துவமும் நிறைந்ததவையாகக் காணப்படுகின்றன. அல்லாஹ்வின் பாதையில் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பனித்த மாபெரும் இறைநேசச் செம்மலே கௌதுல் அஃழம் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் ஆவார்கள்.

முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களுக்கு வல்ல நாயன் மட்டில்லா ஆற்றல்களையும் அற்புதங்களையும் வழங்கியிருந்தான். ஷெய்க் ஸதகுதுல்லாஹில் காஹிரி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் அல்லாஹ் தஆலா குதுபு நாயகத்துக்கு வழங்கியிருந்து ஆற்றல்கள் பற்றி பின்வருமாறு பாடுகிறார்கள்.

اذ كنت للقادر المختار عبدا اطاع * اعطاك من قدرة ما شئت من مستطاع

فانت مقتدر في خلقه ومطاع * انت الوكيل له يا محي الدين

வல்லமை பொருந்திய முக்தாராகிய அல்லாஹ் தஆலாவுக்கு வழிப்பட்ட அடிமையாக தாங்கள் ஆகிவிட்டதால் யா முஹியத்தீனே!,

நீங்கள் இயலும் என்ற நினைத்த அனைத்து சக்திகளையும் அந்த நாயன் உங்களுக்கு வழங்கினான்.

அவனது படைப்புகளில் அவனுக்கு வழிப்பட்டவராகவும் சக்திபெற்றவராகவும் நீங்கள் ஆகிவிட்டீர்கள், படைப்புகளிடத்தில் அல்லாஹ்வின் வகீலாக தாங்கள் ஆகிவிட்டீர்கள் யா முஹியத்தீனே!

தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து, தாகித்திருந்து, தவமிருந்து, தின்மைகளிலிருந்து விலகியிருந்து, இறையோனை வணங்கி, அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட அடியாராக இருந்த குதுபுல் அக்தாப் அவர்களை அந்தஸ்துக்கள் பல வழங்கி தரஜாக்க்ள பல உயாத்தி வல்ல அல்லாஹ் தஆலா கண்ணியப்படுத்தியுள்ளான். ஆகையால்தான் வலிமார்களுக்கெல்லாம் தலைவராக, விலாயாத்தின் அரசராக, கராமத்துக் கடலாக, குதுபுகளின் கலங்கரை விளக்காக கௌது நாயகம் அவர்கள் திகழ்கிறார்கள். அவர்களது கராமத்துகள் அற்புதங்கள் யாவும் பல்வேறுபட்ட றிவாயத்துகள் மூலம் முதவாதிராக (அதாவது பொய்யானவை என்று கூறமுடியாத அளவுக்கு பல அறிவிப்பாளர்களால்) அறிவிக்கட்டவையாகும். இவர்களது மான்புகள் பற்றி பல்வேறு கிரந்தங்கள் எழுதப்பட்டன. அவற்றுள் வேறு அறிஞர்கள் அவ்லியாக்களது சிறப்புகளுடன் சேர்த்து எழுதப்பட்ட நூல்கள் தவிர்ந்து அவர்களது சிறப்புக்களையும் மகிமைகளையும் மாத்திரம் கூறும் பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் அறபியிலும் அறபி அல்லாத மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. மாத்திரமன்றி ஷெய்க் அவர்களும் அவர்களது மார்க்க உபன்னியாசங்களுக்கு அப்பால் பதினெட்டுக்கு மேற்பட்ட கிரந்தங்களை எழுதியிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே கௌதுல் அஃழம் அவர்களது புகழ்கூறும் ரபீஉல் தானியெனும் இரண்டாம் வசந்த மாதத்திலே அன்னாரின் புகழ்பாடி, அகமியமறிந்து நற்பாக்கியம் பெற வல்ல ரஹ்மான் அருள் புரிவானாக. ஆமீன்.

இவ்வண்ணம்

خَادِمُ الغَوْثِيَّةْ

காதிமுல் கௌஸிய்யாஹ்

18.11.2020

